செ.வெ.எண்: 43/2017 நாள்: 18.01.2017

**கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ளஅனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் ஆதார் உதவி மையங்கள் அறிமுகம் மாவட்டஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா. சவான், இ.ஆ.ப.,தகவல்**

ஆதார் அட்டைக்கு பதிவு செய்து ஆதார் எண் அல்லது ஆதார் அட்டை கிடைக்கப்பெறாதவர்கள் மற்றும் ஆதார் அட்டையை தொலைத்தவர்கள் தங்களது ஆதார் எண்ணை தெரிந்து கொள்ள ஏதுவாக ஆதார் உதவி மையங்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையங்கள் 28.2.2017 வரை செயல்படும்.

இந்த ஆதார் உதவி மையங்களில் ஆதார் எண்ணிற்கு ஏற்கனவே பதிவுகளை செய்துவிட்டு ஆதார் எண்/ ஆதார் அட்டை கிடைக்கப்பெறாத பொதுமக்கள் மற்றம் ஆதார் அட்டையை தொலைத்தவர்கள் நேரில் சென்று தங்களது பெயர், பிறந்ததேதி, அஞ்சல் குறியிடு எண், கை விரல் ரேகைமற்றும் கருவிழிகளைப் பதிவு செய்து,சில விநாடிகளில் தங்களின் ஆதார் எண்ணைஅறிந்துகொள்ளலாம்.

மேற்கூறிய வழிமுறையில் கிடைத்த ஆதார் எண்ணைஆதார் உதவிமையங்களின் அருகாமையிலேயே இயங்கும் அரசு இ-சேவைமையங்களில் காண்பித்துவிரல்ரேகை / கருவிழியினைப் பதிவு செய்து ரூ.30/--மட்டும் கட்டணம் செலுத்தி கைக்கு அடக்கமான பிளாஸ்டிக் ஆதார் அட்டையாகவோஅல்லதுரூ.10/- மட்டும் செலுத்தி காகிதத்தில் அச்சிட்டோ பெற்றுக் கொள்ளலாம்.

எனவே ஆதார் எண்ணிற்கு ஒருமுறை பதிவு செய்தவர்கள் மீண்டும் மீண்டும் நிரந்தர ஆதார் பதிவுமையத்திற்கு செல்லத் தேவையில்லை என்றும் மேற்காணும் ஆதார் உதவி மையங்களைஅணுகலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**